**செய்தி வெளியீடு எண்**:6 **நாள்:3.1.2008**

19 வது சாலை பாதுகாப்பு வார விழா கடைப்பிடித்தல்
2008, ஜனவரி 1 முதல் 7 வரை

ஒவ்வொரு ஆண்டும் தேசிய அளவில் சாலை விபத்துக்களில் ஏற்படும் உயிரிழப்பு சுமார் 90,000 என்பது மிகவும் வேதனையளிக்க கூடியதாக உள்ளது. சாலைப் பாதுகாப்பு குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் முகமாக ஒவ்வொரு ஆண்டும் சாலை பாதுகாப்பு வார விழா தேசிய அளவில் ஜனவரி முதல் வாரத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது. தற்போது கடந்த ஆண்டுகளைப் போல மத்திய அரசு அறிவித்துள்ளபடி 19வது சாலை பாதுகாப்பு வாரம் 2008 ஜனவரி 1 முதல் 7 வரை கடைப்பிடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இந்த சாலை பாதுகாப்பு வார விழாவின் மையக்கரு

**ஓட்டுவதில் வேண்டும் கவனம்**
**வேண்டாம் சாகசம்**

தமிழகத்தில் வாகனப் பெருக்கம் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 10 முதல் 11 சதவிகிதம் வரை அதிகரித்து வருகிறது. 1.12.2007 நிலவரப்படி தமிழகத்தில் 6,72,541 போக்குவரத்து வாகனங்களும், 90,77,336 போக்குவரத்து அல்லாத வாகனங்களும் ஆக மொத்தம் 97,49,877 வாகனங்கள் இயங்கி வருகின்றன. மொத்தம் உள்ள வாகனங்களில் சுமார் 76 லட்சம் வாகனங்கள் இரு சக்கர வாகனங்களாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

அபரிமிதமான வாகன பெருக்கத்தினாலும், சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு குறைவினாலும், சாலை விதிகளை முறையாக கடைப்பிடிக்காததாலும் 2007 ஆண்டு நவம்பர் திங்கள் வரை 54,553 சாலை விபத்துக்களில் 11,130 உயிர்களை தமிழகம் இழந்துள்ளது. இதில் சென்னை பெருநகரில் மட்டும் 6409 ம்ாலை விபத்துக்களில் 1096 நபர்கள் உயிரிழந்துள்ளனர். சாலை பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தவும் சாலை விபத்துக்களை தவிர்க்கவும் அரசு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

அ) சாலை பாதுகாப்பு கொள்கையினை 2007 ஆண்டு தமிழக அரசு வெளியிட்டுள்ளது. மத்திய அரசு, தமிழக அரசின் சாலை பாதுகாப்பு கொள்கை குறித்த முயற்சியினை கருத்தில் கொண்டு இதே போன்ற கொள்கையினை பிற மாநிலங்களும் தமிழ்நாடு அரசினை முன்னோடியாக கொண்டு அமுலாக்க வேண்டும் என்றும் அறிவுரை வழங்கியுள்ளது. இதே போன்று, தமிழக அரசின் சாலை பாதுகாப்பு கொள்கையினை முன் மாதிரியாக கொண்டு மத்திய அரசு தேசிய சாலை பாதுகாப்பு கொள்கையினை அறிவிக்க உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆ) குடிபோதையில் வாகனங்களை ஓட்டுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. 2007 ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையிலான கால கட்டத்தில் மாநிலம் முழுவதும் குடிபோதையில் வாகனம் ஓட்டியதற்காக 12,153 நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு அவர்களின் ஓட்டுநர் உரிமம் தற்காலிகமாகவே நிரந்தரமாகவோ ரத்து செய்யப்பட்டுள்ளது. இதேபோல் சாலை விபத்துக்களுக்குள்ளான வாகனங்களை ஓட்டும் ஓட்டுநர்களில் 9.099 ஓட்டுநர்களின் உரிமம் ரத்து செய்யப்பட்டுள்ளது. இதோடல்லாமல் இது போன்று விபத்துக்குள்ளாகும் கனரக வாகனங்களின் உரிமமும் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டு வருகின்றது. 2007 ம் ஆண்டில் ஜனவரி முதல் நவம்பர் மாதம் வரையிலான கால கட்டத்தில் மாநிலம் முழுவதும் இதுபோன்று 581 வாககங்களின் உரிமங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஓட்டுநர்கள் மீதும் உரிமதாரர்கள் மீதும் கடுமையான நடவடிக்கை தொடர்ந்து எடுக்கப்படுவதால் சாலை பாதுகாப்பு பற்றி ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டு வருகிறது.

இ) விபத்துக்களில் காயம் அடையும் நபர்களுக்கு உடனடி சிகிச்சை அளிக்க மாநிலத்தில் 100 அவசர சிகிச்சை மையங்கள் தொடங்கப்பட்டு நல்லவிதமாக தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. 2007 ம் ஆண்டில் ஜனவரி முதல் நவம்பர் வரையிலான காலத்தில் மாநிலத்தில் 10868

நபர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு உயிர் பாதுகாப்பு சேவை அளிக்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

ஈ) 19 வது சாலை பாதுகாப்பு வார விழா கொண்டாடும் முகமாக மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் சென்னை மாநகர காவல் ஆணையாளர் ஆகியோருக்கு ரூ,65,5 இலட்சம் பகிந்தளிக்கப்பட்டுள்ளது. காவல்துறை சுகாதாரத்துறை, செய்தி விளம்பரத்துறை, கல்வித்துறை மற்றும் தன்னார்வ தொண்டு நிறுவனங்களுடன் இணைந்து சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு ஏற்படுத்த அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதே போன்று சாலை பாதுகாப்பு பணிகளை மேலும் திறம்பட செயல்படுத்திட அரசு ரூபாய் 5.50 கோடி அனைத்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் சென்னை மாநகர காவல் ஆணையருக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**<u>19 வது சாலை பாதுகாப்பு வார விழாவில் பின்வரும் செயல்கள் கடைப்பிடிக்க உத்தேசிக்கப் பட்டுள்ளது.</u>**

- வாகன ஓட்டுநர்களுக்கும், மற்ற சாலை உபயோகிப்பவர்களுக்கும் சாலை பாதுகாப்பு சம்பந்தப்பட்டவைகளை கற்றுணர செய்வதற்காக துண்டு பிரசுரங்கள் விநியோகம் செய்தல்.
- மருத்துவ சோதனைகள் மற்றும் கண்பரிசோதனை முகாம்கள் நடத்தி தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மூலம் கண் கண்ணாடிகளை ஓட்டுநர்களுக்கு இலவசமாக விநியோகம் செய்தல்.
- விபத்து பகுதிகளில் அறிவிப்பு பலகைகள், போக்குவரத்து சிக்னல் பலகைகளை நிறுவவும், பாரமரிக்கவும். தேசிய நெடுஞ்சாலைகள் மற்றும் மாநில நெடுஞ்சாலைகள், இதர முக்கிய சாலைகளில் தகுந்த சாலை குறியீடுகள் ஏற்படுத்துதல்.
- அதிக சுமை ஏற்றும் வாகனங்கள் மற்றும் அதிக வேகத்தில் செல்லும் வாகனங்கள், குடிபோதையில் வாகனம் ஓட்டுதல், அனுமதியற்ற இடங்களில் வாகனங்களை நிறுத்துதல், தகுதி சான்றிதழ் இல்லாமல் ஓடும் வாகனங்கள் ஆகியவற்றை

கண்டறிதல், அபாயகரமான பொருள்களை ஏற்றும் வாகனங்களை, ஷேர் ஆட்டோக்களை சிறப்பு சோதனை மேற்கொள்ளுதல்.

- பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சாலை பாதுகாப்பு நெறிமுறைகளை கற்பிக்க சிறப்பு முகாம்கள் மேற்கொள்ளுதல்.
- புத்தாக்க பயிற்சி வகுப்புகள் போக்குவரத்து கழகங்களிலும், தனியார் துறையிலும் பணியாற்றும் ஓட்டுநர்களுக்கு நடத்துதல்.
- சாலை போக்குவரத்து பயிற்சி பூங்காக்களில் குழந்தைகளுக்கு போக்குவரத்து பயிற்சி ஏற்படுத்துதல். சாலைபாதுகாப்பு நிறுவன வாகனங்களில் விழிப்புணர்வு விளம்பரங்கள் செய்தல்.
- செயல்முறை போக்குவரத்து கல்வி முகாம்களை சைக்கிளில் செல்வோர், பாதசாரிகள் மற்றும் இதர பிரிவினர்க்கும், ஆள் உள்ள மற்றும் ஆளில்லா இருப்புப் பாதை குறுக்கு வழித்தடங்களில் நடத்துதல்.
- கல்வி நிலைய வாகனங்களில் சாலை பாதுகாப்பு குறித்த விதிமுறைகள் பின்பற்ற உறுதி செய்தல்.
- இரு சக்கர வாகனங்களில் செல்வோர் தலை கவசம் அணியவும், நான்கு குக்கர வாகன ஓட்டுநர் மற்றும் பயணிகள் பாதுகாப்பு பட்டை அணியவும் வலியுறுத்தல்.

********

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**